இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 530

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 03

**EPU3337– முன் ஆரம்பக் கற்பித்தலில் ஒன்றிணைந்த அணுகுமுறை**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 17.02.2024 நேரம்: மு.ப. 09.30 - மு.ப 11.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. "ஒன்றிணைந்த அணுகுமுறை" என்பதனால் நீங்கள் கருதுவது யாது?
2. இலங்கையில் ஆரம்பக் கல்வியில் ஒன்றிணைந்த கலைத்திட்ட அறிமுகம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
3. முன்பள்ளி, ஆரம்பப்பாடசாலை என்பவற்றுக்கு ஒன்றிணைந்த கலைத்திட்டத்தினை விருத்தி செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளை விபரிக்குக.
4. ஆரம்பக்கல்வியில் ஒன்றிணைந்த கலைத்திட்டம் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?
5. ஒன்றிணைந்த அணுகுமுறை எவ்வாறு பிள்ளையின் விருத்திக்கு பங்களிப்பு செய்கின்றதென விபரிக்குக.
6. ஒன்றிணைந்த அணுகுமுறையின் அம்சங்கள் எவை?
7. முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி என்பனவற்றில் உள்ள ஒன்றிணைந்த அணுகுமுறைகளுக்கிடையிலான ஒத்த தன்மை, வேறுபட்ட தன்மை என்பவற்றினை விளக்குக.
8. ஒன்றிணைந்த அணுகுமுறையில் எவ்வாறு பிள்ளைகளை கணிப்பீடு செய்வீர்?

**(05x08= 40 புள்ளிகள்)**

## பகுதி II

9. **(i)** "ஒன்றிணைந்த அணுகுமுறைக்கும்", "பாடரீதியாக கற்பிக்கும் முறைக்கும்" இடையிலான வேறுபாடுகள் எவை? (5 புள்ளிகள்)

   **(ii)** "பிள்ளையின் முழு விருத்தி" என்பதனால் கருதப்படுவது யாது? (06 புள்ளிகள்)

   **(iii)** ஆரம்பக் கல்வி ஆசிரியராக நீங்கள் பிள்ளைகளின் உடல் ஆற்றல்களை விருத்தி செய்ய போக்குவரத்து என்ற கருப்பொருளில் எவ்வாறு செயற்பாடுகளை திட்டமிடுவீர்கள்? (09 புள்ளிகள்)

10. **(i)** *"இலங்கையில் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்ட மாணவர்களின் ஆளுமையை ஒன்றிணைக்க முயல்கின்றது."* – தேசிய கல்வி நிறுவகம்.

    தற்போதைய இலங்கைக் கலைத்திட்டத்தில் கவனத்திற்குரிய மூன்று (03) தேர்ச்சிகளை பட்டியலிட்டு அவற்றினை விளக்குக. (06 புள்ளிகள்)

**(ii)** இந்திய ஆரம்பப் பாடசாலைகளில் உள்ள ஒன்றிணைந்த கலைத்திட்டத்தினை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**(iii)** இலங்கையின் ஆரம்பப் பிரிவு ஒன்றிணைந்த கலைத்திட்டத்தினையும் இந்தியாவின் ஆரம்பப் பிரிவு ஒன்றிணைந்த கலைத்திட்டத்தினையும் ஒப்பிடுக.

**(08 புள்ளிகள்)**

11. **(i)** நான்காம் தர மாணவர்களுக்கு பொருத்தமாக "எம்மைச் சூழவுள்ள பிராணிகள்" என்னும் கருப்பொருளுக்கு ஏற்ப எண்ணக்கரு வரிப்படத்தினை வரைக.

**(08 புள்ளிகள்)**

**(ii)** பகுதி **(i)** இல் உங்களால் வரையப்பட்ட எண்ணக்கரு வரைபடத்திற்கு ஏற்ப "எம்மைச் சூழவுள்ள பிராணிகள்" என்னும் கருப்பொருளுக்கு ஏற்ப பாடமொன்றினை திட்டமிடுக. உமது பாடத்திட்டம் பின்வரும் வடிவத்தில் அமைய வேண்டும்.

**கற்றல் பேறுகள்**

**(i)** ............................

**(ii)** ............................

**(iii)** ............................

**(iv)** ............................

| கிழமையும் திகதியும் | கற்றல் பேறுகள் | கற்றல் - கற்பித்தல் முறை | கற்றல் கற்பித்தல் சாதனைகள் | நேர ஒதுக்கீடு | கணிப்பீடும் மதிப்பீடும் |
|---|---|---|---|---|---|
| திங்கட்கிழமை (19.02.2024) | **(i)** | | | | |
| | **(ii)** | | | | |
| | **(iii)** | | | | |
| | **(iv)** | | | | |

**(12 புள்ளிகள்)**

12. **(i)** முழுமையான கலைத்திட்டத்தில் ஒன்றிணைந்த அணுகுமுறையினைப் பிரயோகிக்கும்போது எதிர்கொள்ளக் கூடிய **ஐந்து (05)** இடர்பாடுகளை பட்டியலிடுக.

**(02 புள்ளிகள்)**

**(ii)** நீங்கள் பகுதி **(i)** இல் குறிப்பிட்ட இடர்பாடுகளுள் ஏதாவது **மூன்றினை (03)** விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**(iii)** ஒன்றிணைந்த கற்பித்தல் அணுகுமுறையில் ஆசிரியரின் வகிபாகத்தினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. **(i)** "கருப்பொருள் அடிப்படையிலான அணுகுமுறை" என்னும் பதத்தினால் நீங்கள் கருதுவது யாது?

**(05 புள்ளிகள்)**

**(ii)** தரம் மூன்று மாணவர்களுக்கு ஏற்ற தண்ணீர் என்ற கருப்பொருளுக்கு அமைவாக ஒரு மணித்தியாலத்திற்கு பாடத்தினை திட்டமிடுக. **(15 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*